DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2024

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | கார்த்தி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2024.

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை அவருக்காக மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

<u>**முதல் விசாரணை :**</u>

1) நான் தற்போது திருப்புவனம் கொட்டப்பாலயத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்கிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் கனகவேலை தெரியும். சாட்சி சந்திரசேகரையும் தெரியும். அவர் எனக்கு பக்கத்து வீடு. கனகவேல் மற்றும் சந்திரசேகர் இருவரும் இறந்துவிட்டனர். எனக்கு இந்த வழக்கில் இறந்துபோன சங்கரநாராயணனை தெரியும். எனது வீட்டிற்கு பக்கத்தில் அவர் குடியிருந்து வருகிறார். புகார்தாரர் கனகவேலுக்கு சங்கரநாராயணனும் நண்பர்கள். இவ்வழக்கில் எதிரி சிவக்குமாரை எனக்கு தெரியும். அவர் ஆந்திரமாநிலத்தை சேர்ந்தவர்.

சாட்சி சந்திரசேகருக்கு சொந்தமான பழத்தோட்டத்தில் ஆஜர்எதிரி சிவக்குமார் மரக்கன்றுகள் வாங்குவதற்கு ஆந்திராவில் இருந்து வந்திருந்தார். அவ்வாறு வந்தவர் அங்கேயே சிறிது காலம் தங்கி வேலை செய்து வந்தார். அந்த வகையில் அவர் எனக்கு தெரியும்.

கடந்த 26.06.2014ம் தேதியன்று இரவு 10.45 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்தேன். எனது வீடும் சந்திரசேகரின் பழத்தோட்டமும் சுமார் 50 மீ தொலைவில் அமைந்துள்ளது. அங்கிருந்து சந்திரசேகரின் சத்தம்கேட்டது. சந்திரசேகரும் அந்த பழத்தோட்டத்தில் தான் குடியிருந்து வந்தார். நானும் எனது உறவுக்காரர் பிச்சை மணியும் ஓடிச்சென்று பார்த்தோம். 3ம் நம்பர் ரூமிலிருந்து ஆஜர் எதிரி சிவக்குமார் 5ம் நம்பர் ரூமுக்கு இறந்துபோன சங்கிரநாராயணனை அவர் அடித்து இழுத்துச்சென்றதை நான் பார்த்தோம். எங்களை பார்த்தவுடனே 5ம் நம்பர் வாசலில் சங்கரநாராயணை போட்டுவிட்டு

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:20:59 +0530

எதிரி சிவக்குமார் அங்கிருந்து ஓடிச்சென்றார். நாங்கள் ஓடிச்சென்று சங்கரநாராயணை பார்த்தபோது அவருக்கு தலை, காது, ஆகியஇடங்களில் காயம் இருந்தது. அவரது தோள்பட்டையில் குத்துக்காயம் இருந்ததை பார்த்தேன். சம்பவயிடத்திற்கு அருகில் கடப்பாறை ஒன்று இருந்ததை பார்த்தேன்.

சங்கரநாராயணன் மயக்க நிலையில் இருந்தார் 108 ஆம்புலன்சுக்கு நாங்கள் தொலைபேசியல் அழைத்து வரவழைத்து அவரை அங்கிருந்து மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம்.மறுநாள் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி தெரிந்துகொண்டோம். ஆம்புலன்சில் சின்னப்பாண்டி என்ற நபர் அவருடன் சென்றார்.

நான் சென்று பார்த்தபோது சந்திரசேகர் சம்பவயிடத்திலிருந்தார். அவரை விசாரித்தபோது தனது ஏடிஎம் கார்டை கொடுத்து எதிரியிடம் 1000ரூ எடுத்து வரச்சொன்னதாகவும் அவர் 1200 ரூ எடுத்து வந்ததாகவும் அதனால் அவருடைய நடத்தை சரியில்லை என்று இறந்துபோனவருக்கும் எதிரிக்கும்வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் இறந்துபோனவர் சந்திரசேகரனின் தோட்டத்தில் நிர்வாகியாக இருந்தார். அந்த பிரச்சனை தொடர்பாகத்தான் சம்பவம் ஏற்பட்டதாக என்னிடம் தெரிவித்தார். மேற்கண்ட விவரங்களை நான் போலீசார் விசாரணையில் சொன்னேன். இந்த சம்பவம் குறித்து யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

என்னிடம் கடப்பாறையை காட்டினால் அடையாளம் சொல்லமுடியும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டக்கூடிய **சா.பொ. 1** கடப்பாறை தான் எதிரி சிவக்குமார் சங்கரநாராயணனை தாக்கினார். இறந்துபோனவர் கைலி மட்டும் சம்பவ சமயத்தில் கட்டியிருந்தது ஞாபகம். அவர் அணிந்திருந்த கைலி **சா.பொ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரணையில் சம்பவத்திற்கான காரணம், பணம்கூடுதலாக எடுத்ததாக வாக்குவாதம் வந்தபோது சிவக்குமார் வசமிருந்த போட்டோ ஆல்பத்தை இறந்துபோன சங்கரநாராயணன் வாங்கி வைத்துக்கொண்டதாகவும் அதை திரும்ப பெற சிவக்குமார் வந்ததாகவும், சந்திரசேகரை பார்ப்பதற்கு சங்கரநாராணயன் அனுமதி மறுத்ததாகவும் அதனால் ஏற்பட்ட தகராறினால் தான் சம்பவம் நடந்ததாக தெரிந்துகொண்டேன். மேற்கண்ட விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது அப்பா ராமநாதன் இறந்துவிட்டார் அவர் கையெழுத்து என்னால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டக்கூடிய பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து அவருடையதுதான். அது. **அ.சா.ஆ.1** . குறியீடு செய்யப்படுகிறது.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.14 17:21:09 +0530

கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தும் அவருடையதுதான். **அ.சா.ஆ. 2**. குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சாட்சி ராமநாதன் எனது அப்பா. எங்கள் ஊர் தலைவரும் அவர்தான். எனது அப்பா 2019ம் வருடம் இறந்துவிட்டார். சாட்சிகள் வெள்ளைச்சாமி, மகாராஜன், மாடசாமி, சின்னப்பாண்டி, சுப்பிரமணி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து வடமேற்கில் எனது வீடு அமைந்துள்ளது. சந்திரசேகர் எனது ஊருக்கு 30வருடங்களுக்கு முன்பு வந்து தோட்டத்தை ஆரம்பித்தார். சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்து இறந்துபோன சங்கரநாராயணன் அந்த தோட்டத்தில் இருந்தார். இறந்துபோனவரது உறவினருக்கு சம்பவம் குறித்து நான் தகவல் சொல்லவில்லை. போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தார்கள். என்னை சம்பவம் தொடர்பாக போலீசார் 23ம் தேதி சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்க்ள. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. சம்பவயிடத்திற்கு ஒரு மணிநேரத்தில் போலீசார் வந்தார்கள்.

நான் கடப்பாறையை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. போலீசார் வரும்போது கடப்பாறை சம்பவயிடத்தில் தான் இ ருந்தது. போலீசார் என்னை சம்பவயிடத்தில் வைத்து சம்பவயிடத்திற்கு முதல்முறையாக வரும்போது விசாரிக்கவில்லை. போலீசார் வரும்போதே நான் சம்பவத்தை பார்த்தவிவரத்தை சொல்லியுள்ளேன். 12.00 மணிக்கு போலீசார் வந்திருப்பார்கள். அவ்வாறு நான் வரும்போது நான் சம்பவயிடத்தை பார்த்தவிவரத்தை சொல்லியுள்ளேன்.

சந்திரசேகரின் தோட்டம் சுற்றி கம்பிவேலி பொறுத்தி முன்னால்கேட் உள்ளது. தோட்டத்திற்கு வரும்போது கேட் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். கிழக்குபக்கமாக கேட் உள்ளது. அந்த தோட்டம் சுமார் 3 ஏக்கர் பரப்பளவுள்ளது. 3 ஏக்கர்சுற்றியும் கம்பிவேலி உள்ளது. கேட் வழியாக உள்ளே சென்றால் 20 அடி காலியாக உள்ளது. அதற்கு பிறகு வராண்டா உள்ளது. வீடு தோட்டத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

எனது வீடு சுமார் 1 ஏக்கர் நிலத்தை தாண்டிதான் இருக்கும் என்றால் இருக்கலாம். சந்திரசேகர் வீட்டிற்கு பின்னால் தென்னந்தோப்பு பனை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த தோட்டத்தை ஒட்டி கிழக்குபக்கம் எனது வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு சம்பவத்திற்கு முன்பு புகார்தாரர் கனகவேலை தெரியாது. எனக்கு

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:21:18 +0530

சிவக்குமாரை பழக்கம் கிடையாது என்றால் சரிதான். ஆனால் சந்திரசேகர் சொல்லி அவர் இருக்கும் விவரம் தெரியும். போலீசார் விசாரிக்கும்போது ஆஜர் எதிரி சங்கரநாராயணை 3ம் அறையிலிருந்து 5ம்அறைக்கு இழுத்துசென்ற விவரத்தை பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு பார்க்கவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏடிஎம் ல் பணம் எடுத்த விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சம்பவம் எதையும் நேரில் பார்க்கவில்லை என்றும் எனது அப்பா ஊர் தலைவர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரிக்கும் போது சங்கரநாராயணனை 5ம் வாசலில் பார்த்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவருக்கு உடம்பில் இரத்தம் வந்தது. நான் அவரை தூக்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன நபரின் இறப்பிற்கு காரணம் யார் என்று தெரியாத சூழ்நிலையில் 2 நாட்களுக்கு பிறகு போலீசார் விசாரித்ததாகவும் அதில் நடந்த சம்பவத்தை பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:21:27 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.138/2024

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | பிச்சைமணி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2024.

எதிரி விசாரணையின்போது ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் பொட்டப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 கார்த்தி எனது அண்ணன் மகன். அவர் உள்ளூரில்தான் குடியிருந்து வருகிறார். எங்கள் ஊரைச்சேர்ந்த் சந்திரசேகரை தெரியும். அவர் பக்கத்துவீட்டுக்காரர். அவர் இறந்து சுமார் 3 ஆண்டுகள் ஆகிறது. அவர் செடிகள் வளர்ப்பு மற்றும் மருந்து தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார். புகார்தாரர் கனகவேலை தெரியாது. வழக்கில் இறந்த சங்கரநாராயணனை தெரியும். சந்திரசேகர் கம்பெனியில் அவர் நிர்வாகியாக இருந்தார்.

இந்த வழக்கின் எதிரி சிவக்குமாரை எனக்கு தெரியும். வந்தால் அவரை என்னால் அடையாளம் காட்டமுடியும். நீதிமன்றத்தில் இன்று அவர் ஆஜரில்லை. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார். பூக்கன்று வளர்க்கும் ஆல்பம் ஒன்றை சிவக்குமார் வைத்திருந்தார்.பணம் தாராததால் சந்திரசேகர் அதை திருப்பி தராமல் வைத்திருந்தார். அந்த பிரச்சனை தொடர்பாக சிவக்குமாரை வேலையை விட்டு வெளியே செல்ல சொல்லிவிட்டார். 26.06.2014ம் தேதியன்று இரவு 10.45 மணியளவில் தோட்டத்திற்கு பக்கத்து வீடான நான் எனது வீட்டில் இருந்தேன். என்னுடன் எனது தம்பி கார்த்தியும் இருந்தார்.

சந்திரசேகர் தோட்டத்திலிருந்து அவரது சத்தம் கேட்டது. உடனே நானும் கார்த்தியும் அந்த இடத்திற்கு விரைந்து சென்றோம். அப்போது நாங்கள் பார்த்தபோது எதிரி சிவக்குமார் சங்கரநாராயணனை கடப்பாறையால் அடித்து இழுத்துக்கொண்டு

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:21:40 +0530

சென்றதை பார்த்தோம். சுமார் 30 அடி தூரத்திலிருந்து மேற்கண்ட விவரத்தை பார்த்தோம். சந்திரசேகர் அந்த இடத்திற்கு எதிரே அவரும் நின்று பார்த்துக்கொண்டிருந்தார். நாங்கள் சென்று பிடிப்பதற்குள் சிவக்குமார் அங்கிருந்து ஓடிவிட்டார். சங்கரநாராயணன் அரை மயக்கத்தில் அவர் காயத்துடன் கீழே விழுந்துகிடந்தார். அவருக்கு தலை, காது, கை ஆகிய இடங்களில் காயம் இருந்தது. 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி வரவழைத்து சின்னப்பாண்டி உதவியுடன் மதுரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அன்று விடியற்காலையில் சங்கரநாராயணன் இறந்த செய்தி தெரிந்துகொண்டோம். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்.

சந்திரசேகரை சம்பவம் குறித்து நான் விசாரித்தபோது அவர் எதிரி சிவக்குமாரிடம் ஏடிஎம் கார்டில் பணம் எடுக்க சொன்னதில் அவர் 1000ரூ எடுக்க சொன்னதற்கு அவர் 1200 எடுத்ததாகவும், எனவே சிவக்குமார் வேலைக்கு சரியில்லை என வேலையை விட்டு அனுப்பியதாகவும் அவர் கொடுத்திருந்த ஆல்பத்தை திருப்பி கேட்க வந்திருந்ததாகவம் சந்திரசேகர் வீட்டிற்குள் படுத்திருந்ததாகவும் சங்கரநாராணன் சந்திரசேகரை பார்க்கவிடாததால் அதனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு சம்பவம் நடந்ததாகவும் மேற்கண்ட விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

எங்களை பார்த்தவுடன் சிவக்குமார் கையில் வைத்திருந்த கடப்பாறையை போட்டுவிடடு ஓடிவிட்டார். அந்த கடப்பாறையை என்னால் பா ர்த்தால் அடையாளமத் சொல்லமுடியும். அது தான் சா.பொ.1. போலீசார் என்னை விசாரிக்கும்போது எனக்கு தெரிந்த விவரங்களை சொன்னேன். நாங்கள் 3 பேர்த ான் சம்பவத்தை பார்த்தோம். மற்றவர்கள் அதற்கு பிறகு சம்பவயிடத்திற்கு கேள்வி பட்டு வந்தார்கள். போலீசாரிடம் புகார் யார் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவயிடத்திற்கு போலீசார் 12.00மணிக்கு வந்தார்கள். மருத்துவமனைக்கு சின்னப்பாண்டி அழைத்துச்சென்றார். அவரிடம் சம்பவம் எப்படி நடந்தது என்பதை சொல்லி அனுப்பவில்லை. ராமநாதன் எனது உடன்பிறந்த அண்ணன். அவர் அந்த சமயத்தில் பஞ்சாயத்து பரசிடன்டாக இருந்தார் என்றால் சரிதான். போலீசாரிடம் கடப்பாறையை காட்டினேன். நாங்கள் எடுத்துக்கொடுக்கவில்லை. போலீசார் அதை எடுத்துக்கொண்டார்கள். சந்திரசேகர் எங்கள் ஊருக்கு 35 வருடங்களுக்கு முன்பு தோட்டம் அமைப்பதற்கு வந்தார். நிறையஇடம் இருந்தது தற்போது 1 1/2 ஏக்கர் மட்டுமே



SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:21:53 +0530

உள்ளது. சங்கரநாராயணன், சந்திரசேகர் இறப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்பு வந்தார். பொட்டப்பாளையம் கிராமம் ஒரு பரலாங் தூரம் உள்ளது. எனது வீடும் சந்திரசேகர் வீடும் 300மீ இடைவெளியில் உள்ளது. எனது வீடு வடக்கு திசை பார்த்து அமைந்துள்ளது. சந்திரசேகர் வீடு கிழக்கு திசை பார்த்து உள்ளது. சந்திரசேகர் வீட்டை சுற்றி முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் தற்போது தான் அமைக்கப்பட்டுள்ளது. சம்பவ சமயத்தில் முள்வேலைன அமைக்கப்பட்டடுள்ளது என்றால் அது தவறு. இரும்புகேட் வழியாகத்தான் சந்திரசேகர் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். அதற்கு அடுத்து மதுரை நெடுங்குளம் ரோடு அமைந்துள்ளது என்றால் சரிதான். ரோட்டிற்கு அடுத்து எங்கள் வீடு அமைந்துள்ளது.

கேட்டிலிருந்து சுமார் 150 அடி தூரம் சந்திரசேகர்வீடு இருக்கும். வராண்டா நுழைந்தவுடன் சந்திரசேகர் அறை அமைந்துள்ளது, சந்திரசேகர் அ்றைக்கு செல்லாமலே மற்ற அறைக்கு செல்லமுடியும். அறைக்கு வெளியே சங்கரநாராயணன் அடிபட்டு கிடந்தமதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீசார் 12.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்தபோது நடந்த விவரங்களை நானும் சந்திரசேகரும் போலீசாரிடம் சொன்னோம்.

1 1/2 ஏக்கர் தோப்பில் முன் பகுதியில் சந்திரசேகர் வீடும் பின் பகுதியில் தோப்பும் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஏடிஎம் பணம் எடுத்தது விவரம் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது சந்திரசேகர் சொல்லிதான் தெரியும். சம்பவத்திற்கு முன்பும் சந்திரசேகர் இது குறித்து சொல்லியுள்ளார். சந்திரசேகர் பிரேதத்தை பார்ப்பதற்கு நான் மதுரை மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் சம்பவயிடத்தில் பாகர்க்கும்போது சங்கரநாராயணன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். நாங்கள் தூகக்வில்லை. நான் கூறுவது போல் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் எனது அண்ணன் ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. 29ம் தேதிக்கு முன்பு போலீசார் எங்களை விசாரிக்கவில்லை.

நான்சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் நேரடியாக எந்த விவரமும் பார்க்கவில்லை என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபரின் இறப்பிற்கு காரணம் யார் என்று தெரியாத சூழ்நிலையில் 2 நாட்களுக்கு பிறகு போலீசார் விசாரித்ததாகவும் அதில் நடந்த

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:22:01 +0530

சம்பவத்தை பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:22:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2024

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | வெள்ளைச்சாமி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2024.

எதிரி விசாரணையின்போது ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் பொட்டைப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அசா.1 கார்த்தி, அசா.2 பிச்சைமணி எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள்.இறந்துபோன சாட்சி 2 சந்திரசேகரை தெரியும். அவர் எங்கள் ஊரில் தோட்டம் மற்றும் மருந்து தயாரிக்கும் தொழில் செய்து வந்தார். சாட்சி மகாராஜன் எனது உறவினர். எதிரி சிவக்குமார் எனக்கு தெரியும்.சம்பவத்தன்று நான் அவரை பார்த்துள்ளேன். அதற்கு முன்பு அவரை பரிட்சயம் கிடையாது. இறந்துபோன சங்கரநாராயணனை தெரியாது. பார்த்ததில்லை. போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்.

கடந்த 26.06.2014ம் தேதி இருசக்கர வானத்தில் நான் பழனிக்கு சென்றேன். அவ்வாறு நான் சென்று விட்டு 27.06.2014ம் தேதியன்று நான் இரவு வீடு திரும்பினேன். முதல்நாள் 26ம் தேதி இரவு 10.30 மணியளவில் மருந்து கம்பெனி தோட்டத்தின் வாசலில் அவர் நின்று கொண்டிருந்ததை பார்த்தேன். அப்போது நான் அவரை எதற்காக இங்குநிற்கிறீர்கள் என கேட்டபோது சந்திரசேகர் கம்பெனியில் வேலை செய்வதாக சொன்னார். நான் அவரை பார்த்துவிட்டு சென்றேன். போலீசார் என்னை விசாரிக்கும்போது சம்பவத்தன்று இரவு மேற்கண்ட நபர் சம்பவயிடத்திற்கு வந்த விவரத்தை நான் பார்த்ோதன் என போலீசார் விசாரிணயளில் சொல்லியுள்ளேன். என்னுடன் அந்த சமயத்தில் சாட்சி மகராஜனும் பழனிக்கு வந்திருந்தார். அவரும் ஆஜர் எதிரியை பார்த்தவிவரத்தைபோலீசார் விசாரணையில் சொல்லியுள்ளார்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:22:26 +0530

காவல்நிலையத்தில் 29ம் தேதி எதிரி சிவக்குமாரை போலீசார் கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் போலீசார் அழைத்ததன்பேரில் நான் காவல்நிலையம் சென்றிருந்தேன். அங்க எதிரியை அடையாளம் காட்டி நான் சம்பவத்தன்று எதிரியை பார்த்தவிவரத்தை சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை 29ம் தேதி காலை 10.00, 11.00 மணிக்கு விசாரித்தார். போலீசார் என்னை விசாரிக்கும்போது பழனிக்கு சென்று கொண்டிருந்தோம் என்ற விவரத்தை சொல்லவில்லை. இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். அது எனக்கு சொந்தமானது. என்னுடன் மகாராஜ அமர்ந்திருந்தார். சம்பவயிடத்திலிருந்து சாட்சி கார்த்தி மற்றும்பிச்சை மணி வீடு சுமார் 100 அடி தூரத்தில் அமைந்துள்ளது. நாங்கள் போகும்போது கார்த்தி மற்றும் பிச்சைமணி அவர்கள் வீட்டிலிருந்தார்களா என்பதை கவனிக்கவில்லை.

கார்த்தி வீட்டில் விளக்கு எரிந்துகொண்டிருந்ததா ஆள் இருந்தார்களா என்பதை கவனிக்கவில்லை. காவல்நிலையத்தில் ஆஜர் எதிரியை 29ம் தேதி அடையாளம் காட்டிய விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 29ம் தேதி போலீசார் விசாரிக்கும்வரை நான் எதிரியை பார்த்தவிவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவத்தன்று எதிரியை பார்க்கவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.14 17:22:35 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2020

PROSECUTION WITNESS No - PW- 4

| | | | |
|---|---|---|---|
| Name : | மாடசாமி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2024.

எதிரி விசாரணையின்போது ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொட்டைப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கரிசல்குளம் பிரிவில் உள்ள வாசர்கம்பெனியில் இரவு வாட்ச்மேனாக வேலை செய்கிறேன். சாட்சி சந்திரசேகரின் தோட்டம் எனக்கு தெரியும். எனது கம்பெனியும் சந்திரசேகரின் கம்பெனியும் சுமார் 2கிமீ இடைவெளியில் அமைந்துள்ளது.

கொலை செய்ததாக சொல்லும் நபர் சம்பவசமயத்தில் இரவு 11.00 மணியளவில் பதட்டமாக என் கம்பெனி அருகில் வந்து என்னை அழைத்து கையில் மாத்திரை வைத்திருப்பதாகவும் மாத்திரை போடுவதற்கு தண்ணீர் வேண்டும் என்றும் தனக்கு மயக்கம் வருவதாகவும் சொன்னார். நான் அவருக்கு தண்ணீர் கொடுத்தேன். என் கண் முன்னாலே அவர் மாத்திரை போட்டுவிட்டு அங்கிருந்து நடந்தே சென்றுவிட்டார். அவரை நான் பார்த்தபோது அவர் கால், கைகள் நடுங்கியது. அவர் எங்கள் ஊர் காரர் கிடையாது.

இந்த நேரம் ஏன் இங்கு வருகிறீர்கள் என கேட்டபோது தான் விராதனூர் ரைஸ்மில்லில் வேலை பார்ப்பதாகவும், தண்ணீர் வேண்டும் என சொன்னார். அது எங்கள் கம்பெனியிலிருந்து சுமார் 1மைல் தூரம் இருந்தது. மேற்கண்ட நபர் என்னிடம் தமிழில் தான் பேசினார். போலீசார் வேனில் ஆஜர் எதிரியை என் வீட்டிற்கு அழைத்துவந்து என்னிடம் மேற்கண்ட நபரை சம்பவத்தன்று பார்த்தேனா என்று கேட்டார்கள். நான் ஆஜர் எதிரியை அன்றைய தினம் பார்த்து தண்ணீர் கொடுத்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேன். அதே போல்எதிரியும் என்னிடம் தண்ணீர் குடித்த விவரத்தை போலீசாரிடம் தகவல் சொன்னார்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:22:52 +0530

தற்போது தான் எங்கள் கம்பெனியில் கேமரா பொறுத்தப்பட்டுள்ளது. சம்பவசமயத்தில் இல்லை. மேற்கண்ட விவரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன். மாத்திரை கம்பெனியில் ஒரு நபரை அவர் கொலை செய்த காரணத்திற்காக போலீசார் அவரை கைது செய்து அழைத்து வந்த விவரத்தை பின்னால் விசாரணையில் தெரிந்துகொண்டேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை 2 நாட்கள் கழித்து வீட்டில் வந்து விசாரித்தார்கள். மறுநாள் காலை தான் எனக்குகம்பெனியில் நடந்த கொலை குறித்த விவரம் தெரியும். நான் போலீசாரை காவல்நிலையம் சென்று எதிரி தண்ணீர் குடித்த விவரத்தை நானாக சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது எதிரியை போலீசார் அழைத்து வந்து எதிரி என்னிடம் தண்ணீர் குடித்ததை ஒப்புக்கொண்ட விவரத்தை போலீசரிடம் சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் எதிரி தன்னிடம் தண்ணீர் வாங்கி குடிக்கும்போது ரைஸ்மில்லில் வேலை பார்த்ததாக சொல்லியுள்ளேன். நான் கூறுவது போல் எதிரி என்னிடம் தண்ணீர் வாங்கி குடித்ததாக போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியம்ளிக்கிறேன் என்றால்சரியல்ல. மாத்திரை கையில் வைத்திருந்ததாகவும் பதற்றமாக இருந்ததை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:23:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2020

PROSECUTION WITNESS No - PW- 5

| | | | |
|---|---|---|---|
| Name : | சுப்பிரமணியன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2024.

எதிரி விசாரணையின்போது ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் பொட்டைப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனக்கு தோட்டத்துக்காரர் சந்திரசேகரை தெரியும். கடந்த 27.06.2014ம்தேதியன்று காலை 10.30 மணியளவில் நான் விற்பனை தொடர்பான இடம் பார்த்து பேசிக்கொண்டிருந்தபோது திருப்புவனம் காவல்துறை ஆய்வாளர் அங்கு வந்தார். அவர் சம்பவயிடத்திற்கு செல்லயிருப்பதாகவும் அங்கு விசாரணைக்கு சாட்சியாக வருமாறு என்னையும் ஊர் தலைவர் ராமநாதனையும் அழைத்தார். அதன்பேரில் நானும் ராமநாதனும் சம்பவயிடமான சந்திரசேகரின் தோட்டத்திற்கு சென்றோம்.

சம்பவயிடத்தில் பார்வைமகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் போலீசார் தயார்செய்தார்கள். சம்பவயிடமானது 5ம் நம்பர் அறைக்குள் நடந்தது. அந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு மகஜர் தயாரித்தார்க்ள. எங்கள் முன்னிலையில ் தயார் செய்த மகஜர் தான் **அ.சா.ஆ. 3**. குறியீடு செய்யப்படுகிறது. அதில் நாங்கள சாட்சியாக கையொப்பம் போட்டோம். சம்பவயிடத்திலிருந்த சிமிண்ட் இரத்தம் பட்ட துகள்கள் சிறிதளவும் மாதிரி சிமிண்ட் சிறிதளவும் தயாரித்தார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 4**. குறியீடு செய்யப்படுகிறது. **சா.பொ. 3** மற்றும் **4** இரத்தம் படிந்த தரை சிறிதளவு மற்றும் மாதிரி தரை சிறிதளவு இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். சந்திரசேகரின் வீடு மற்றும்தோட்டம் அமைந்துள்ள பகுதி 5000சதுரடி பரப்பளவு கொண்டது. சுற்றியும் முள் வைத்து அடைக்கப்பட்டுள்ளது. மெயின் கேட்டிலிருந்து வீட்டிற்கு செல்வதற்கு சுமார் 200 அடி தூரமிருக்கும்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.14 17:23:12 +0530

அந்த கட்டிடத்தில் மொத்தம் 5 அறைகள் உள்ளது. ஆய்வாளர் உள்ளே சென்று பார்வையிட்டு வரைபடம் தயாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சாட்சி ராமநாதன் சம்பவசமயத்தில்  ஊர் தலைவர் என்றால் சரிதான். எனக்கு அவர் உறவினர் தான். சாட்சி கார்த்தி, பிச்சைமணி ஊர்காரர்கள் தான் உறவினர் கிடையாது. கார்த்தி மற்றும் பிச்சைமணி வீடு சம்பவயிடத்திலிருந்து 250, 300 அடி தூரத்தில் அமைந்துள்ளது. அவர்களது வீடு வடக்கு, தெற்கு வாசல் உள்ளது. சந்திரசேகர் வீடு கிழக்கு பார்த்தவீடு. பிச்சை மணி வீடு வடக்கு பார்த்தவீடு, கார்த்தி மற்றும்பிச்சை மணி வீடு ஒரே வீடு தான் இருபக்கமும் வாசல் உள்ளது. நான் சாட்சியாக இருந்த வரைபடத்தில் கார்த்தி மற்றும் பிச்சை மணி வீடு அமைந்துள்ள இடத்தை சுட்டிக்காட்டவில்லை என்றால் சரிதான்.

நான் சந்திரசேகர் தோட்டத்திற்கு மருந்து வாங்குவதற்கு அடிக்கடி சென்றுள்ளேன் எனவே அந்த இடம் எனக்கு பரிட்சயம் தான். அந்த அறைகளில் மருந்து பொருட்கள் இருந்தது. எல்லா அறைகளிலும் அவருக்கு தேவையான பொருட்கள் அவர் வைத்திருந்தார். நான் சம்பவயிடத்தை பார்க்கும்போது 5ம் நம்பர் அறையில் கடப்பாறை கம்பி இருந்ததை பார்த்தேன். போலீசார் அந்த கடப்பாறையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள்.

அவ்வாறு கடப்பாறை இருந்ததை வரைபடத்தில் சுட்டிக்காட்டவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எங்கபள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயாரிக்கவில்லை என்றும் பின்னிட்டு வழக்கிற்காக மேற்கண்ட ஆவணங்களும் சான்றுப்பொருட்களும் தயாரிக்கப்பட்டது என்றும் நானும் ஊர் தலைவரும் காவல்நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் போட்டோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.14 17:23:21 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை